## 2

# வசனப்பகுதி அடங்கியுள்ள புத்தகத்தின் வடிவமைப்பைப் படித்தல்

வேதவசனப் பகுதியை வசனங்களாகப் பிரித்து வைத்திருத்தல் என்பது, குறிப்பாக ஒவ்வொரு வசனமும் தனித்தனிப் பத்தியாகப் பிரித்து வைத்திருத்தல் என்பது, வேதாகமத்தைப் புரிந்து கொள்வதற்கு மாபெரும் தடைகளில் ஒன்றாக உள்ளது. வசனங்கள் என்பவை வேதவாக்கியங்களை அடையாளப்படுத்துதல், கண்டறிதல் மற்றும் அவற்றை மனப்பாடம் செய்தல் ஆகியவற்றில் உதவி நிறைந்தவைகளாக இருக்கையில், அவைகள் விளக்கம் அளிப்பவருக்கு உதவுவதில் தடையாகவும் உள்ளன. வசனங்கள் என்பவை வேதவசனப்பகுதியின் சிந்தனையை முறித்து செய்தியின் ஓட்டத்தை இடைமறிக்கின்றன. அவைகள் வேதவசனப் பகுதியில் மனிதர்களால் வைக்கப்பட்ட செயற்கையான பிரிவினைகளாக உள்ளன.

வேதாகமத்தை வசனம் வசனமாகப் படிப்பதற்கு மாறாக, வேத வாக்கியத்தை எழுத்தாளர் எழுதிய வகையில் புரிந்துகொள்ள நாம் முயற்சி செய்ய வேண்டும். அந்த முடிவிற்கு, ஒரு வசனப்பகுதிக்குள் உள்ள வடிவமைப்புகளைக் கண்டறிய நம்மை ஊக்குவிக்கவும் அதைச் செய்யக் கூடியவர்களாக்கவும், இந்தப்பாடம் வடிவமைக்கப் பட்டுள்ளது.

குறிப்பிட்ட ஒரு வசனப்பகுதி காணப்படுகிற புத்தகத்தின் ஆய்வுக்கருத்தை, செய்தியை அல்லது நோக்கத்தை நாம் புரிந்துகொள்வது அவசியம் என்பது மட்டுமல்ல (பாடம் 1), ஆனால் மேலும் நாம், (1) முழுமையான வகையில் புத்தகத்தின் வடிவமைப்பு மற்றும் (2) புத்தகத்தின் உள்ளே இருக்கும் வடிவமைப்புகள் ஆகியவற்றையும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியது அவசியமாக உள்ளது. எழுத்தாளர் தமது நோக்கத்தை நிறைவேற்றுவதற்குத் தமது பாடக்கருத்துக்களை எவ்வாறு ஒருங்கமைத்தார்?

வேதவசனங்களைப் புரிந்து கொள்ள நாடுதலில், வடிவமைப்புகளைக் கண்ணோக்குதல் அவசியமாயிருப்பது ஏன்? எழுதுதல் என்பது ஒரு குறிப்பிட்ட ஒருங்கமைப்பை உள்ளடக்குகிறது. தகவல் அறிவித்தல் அல்லது நம்பச் செய்தல் அல்லது இணங்க வைத்தல் என்பதை நோக்கமாகக் கொண்டு எழுதுதலில், ஒரு எழுத்தாளர் தமது உணர்வு நிலையின் தாக்கத்திற்கு ஏற்ற வகையில் இங்கும் அங்குமாகச் சுற்றித் திரிவதில்லை. அவர் ஒரு நோக்கத்தைக் கொண்டிருக்கிறார் மற்றும் அந்த நோக்கத்தைச் சாதிப்பதற்கு அவர் தர்க்கரீதியான (அல்லது உளவியல் ரீதியான) வகையில் முயற்சி செய்கிறார். எழுத்தாளர் தமது எழுத்தின் ஒருங்கமைப்பு பற்றி வாசகருக்குச் சில குறிப்புகளைத் தருகிறார். அவர் “கூடுதலாக,” “மேலும்,” “இதற்கு மறுபுறத்தில்” மற்றும் “ஆகையால்” என்பது

போன்ற மாறுநிலை வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார். எழுத்தாக்கத்தின் முக்கியமான இடங்களில், அவர் - வார்த்தைகள், சொற்றொடர்கள் அல்லது மரபுச் சொற்கள் போன்ற - இலக்கிய நடையின் மற்ற கருவிகளைப் பயன்படுத்தலாம். இந்தச் சொற்றொடர்கள் எழுத்தாக்கத்தின் வடிவமைப்பிற்குக் குறிப்புகளை தருகின்றன என்பதை, பகுத்தாய்வு செய்யும் வாசகர் கண்டறிய முடியும்.

மற்ற எழுத்தாக்கங்களுக்கு உண்மையானதாக உள்ளது வேதாகமத்திற்கும் உண்மையானதாக உள்ளது. வேதாகமத்தின் புத்தகம் ஒன்றினுள் வடிவமைப்புகளை - எழுத்தாளர் தமது செய்தியை அளிக்க வடிவமைப்புகளைப் பயன்படுத்துவதால் அவைகள் அங்குள்ளன - நாம் காண முடிந்தால், அந்தப் புத்தகத்தையும் அதனுள் இருக்கும் எந்த வசனப்பகுதியையும் புரிந்துகொள்ளும் வழியில் நாம் நன்கு முன்னேறிச் செல்லுகிறோம் என்றாகிறது.

வேதாகமத்தின் புத்தகம் ஒன்றில் காணப்படும் வடிவமைப்புகளை நாம் எவ்வாறு அடையாளம் காண முடியும்? ஆலோசனையாகக் கூறப்படும் வரைகுறிப்புகள் அல்லது வடிவமைப்புகளை நாம், பல்வேறு ஆதாரமூலங்களில் காணப்படும் அறிமுகக் கருத்துக்களில் கண்ணோக்க முடியும். இருப்பினும் எழுத்தாளர் தமது செய்தியை நாம் பெறுவதற்கு உதவியாக அவரே எவ்வாறு தமது பாடக்கருத்துக்களை ஒழுங்கு செய்திருக்கிறார் என்பதற்கான குறிப்புகளைக் கண்ணோக்குதலுக்கு அந்தப் புத்தகத்தை நாமே வாசித்துப் பார்த்தல் என்பது, வேதாகமத்தின் ஒரு புத்தகத்தினுடைய மற்றும் ஒரு வசனப்பகுதியினுடைய வடிவமைப்பைக் கண்டறிதலுக்கு மிகச்சிறந்த வழியாக இருக்கிறது. தக்க வகையிலான முயற்சியுடன் நாம், மற்ற ஆதாரமூலங்களின் உதவி அதிகமின்றி, வேதாகமத்தின் புத்தகம் ஒன்றில் காணப்படும் வடிவமைப்பை நாமே கண்டறியக் கூடியவர்களாக இருக்கிறோம்.

வேதாகமத்தின் வடிவமைப்புகளை நாம் எவ்வாறு கண்டறிய முடியும் என்பதை விவரிப்பதற்கு பல உதாரணங்கள் கீழே தரப்படுகின்றன. வடிவமைப்பின் இரு "அடுக்குகள்" ஆழ்ந்து சிந்திக்கப்படுகின்றன: வேதாகமப் புத்தகம் ஒன்றில் முழுமையான வகையில் அதன் வடிவமைப்பு மற்றும் அந்தப் புத்தகத்தினுள் இருக்கும் பெரிய வடிவமைப்புகள்.

## புத்தகத்தின் வடிவமைப்பு

வேதாகமப் புத்தகம் ஒன்றில் வடிவமைப்பு என்பது, வடிவமைப்பின் முதல் "அடுக்காக" உள்ளது.

### "வடிமைப்பு இல்லாத" புத்தகங்கள்

சில புத்தகங்கள், முற்றிலுமாக பகுத்தறியும் வடிவமைப்பைக் கொண்டிராதவையாகக் காணப்படுகின்றன. பழைய ஏற்பாட்டில், சங்கீதங்களின் புத்தகம் என்பது தனித்தனி சங்கீதங்களின் தொகுப்பாக உள்ளது; ஆனால் இந்தப் புத்தகத்தில் சங்கீதங்கள் காணப்படும் வரிசைமுறை, தனித்தனி சங்கீதங்களின் அர்த்தத்தைத் தீர்மானிப்பதில்லை. இதே விஷயம் ஞானக் கூற்றுகளின் தொகுப்பான நீதிமொழிகளைப் பற்றியும் கூறப்பட முடியும். இந்தப் புத்தகத்தில் பல நீதிமொழிகள் ஒன்றுகூடி ஒருமைப்பாடான வகையை கொண்டிருந்து பகுத்தறியக்கூடிய வடிமைப்பைக் கொண்டிருந்தாலும், இந்தப்

புத்தகத்தின் ஒரு குறிப்பிட்ட வசனப்பகுதி இருக்கும் இடமானது அனேகமாக அர்த்தம் நிறைந்ததாக இருப்பதில்லை.

புதிய ஏற்பாட்டின் யாக்கோபின் நிருபம் வரைகுறிப்பிடச் சிரமமானதாக உள்ளது. முழுமையாக கண்ணோக்குகையில் யாக்கோபின் நிருபம் ஒரு ஆய்வுக்கருத்தைக் கொண்டுள்ளது; ஆனால் அந்த ஆய்வுக்கருத்து வடிவமைப்புடன் எவ்வாறு எடுத்துச் செல்லப்படுகிறது என்பது கண்டறிய சுலபமானதாக இருப்பதில்லை. அதுபோன்றே, 1 யோவான் நிருபத்தின் ஒருங்கமைவு தெளிவாகத் தெரிவதில்லை. இந்த நிருபத்தில் ஒரே வகையான கருத்துக்கள் அல்லது ஆய்வுக்கருத்துக்கள் திரும்பத் திரும்ப வருகின்றன, ஆனால் இது ஒரு தர்க்கரீதியான வடிவமைப்பைக் கொண்டிருப்பதாகக் காணப்படுவதில்லை.

**"வடிவமைப்புள்ள" புத்தகங்கள்**

இதற்கு மறுபுறத்தில், சில புத்தகங்களின் வடிவமைப்புகள் சிறு முயற்சியுடன் கண்டறியப்பட முடியும். பல உதாரணங்கள் பின்வருமாறு:

1. *எபேசியருக்கு எழுதிய நிருபம்.* எபேசியருக்கு எழுதிய நிருபம் ஒரு தெளிவான வடிவமைப்பு உடையதாக இருக்கிறது. இந்தப் புத்தகத்தின் முதல் பாதி (அதிகாரம் 1-3) உபதேசத்தைப் பற்றியதாக உள்ளது: எபேசியர்களை இரட்சிக்க தேவன் செய்தது என்ன என்பது. இரண்டாவது பாதி (அதிகாரம் 4-6) நடைமுறை விஷயங்களைப் பற்றியதாக உள்ளது: கிறிஸ்தவர்கள் எவ்வாறு வாழ வேண்டும். இதன் கருத்து பின்வருமாறு வெளிப்படுத்தப்பட முடியும்: முதல் பாதியானது "சுட்டிக்காட்டுதல்கள்" - தேவன் மற்றும் தேவன் செய்துள்ளவை பற்றிய கூற்றுகள் - பற்றியதாக உள்ளது. இரண்டாவது பாதியானது, "கட்டளைகள்" - தேவன் செய்துள்ளவற்றின் நிமித்தம் கிறிஸ்தவர்கள் செய்ய வேண்டியது என்ன - என்பது பற்றியதாக உள்ளது. எபேசியர் நிருபத்தின் இவ்விரண்டு பாதிகளையும் ஒன்றாக இணைக்கும் வசனமாக எபேசியர் 4:1 உள்ளது: "ஆதலால், கர்த்தர்நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தியென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் (முதல் மூன்று அதிகாரங்களின் ஆய்வுக்கருத்து) பாத்திரவான்களாய் நடந்து (கடைசி மூன்று அதிகாரங்களின் ஆய்வுக்கருத்து)." எபேசியருக்கு எழுதிய நிருபத்தின் ஒரு வசனப்பகுதிக்கு விளக்கம் அளிக்கும் ஒருவர் தமது சிந்தையில் இந்த வடிவமைப்பைக் காத்துக்கொள்வது அவசியமாக உள்ளது.

2. *வெளிப்படுத்தின விசேஷம்.* வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் சித்தரிக்கப்பட்ட நிகழ்வுகள் யாவையும் அந்தப் புத்தகம் எழுதப்பட்ட வேளையில் ஏற்கனவே நடந்திருந்தன என்று சிலர் நம்பலாம், ஆனால் வெளிப்படுத்தின விசேஷம் 1:19, "நீ கண்டவைகளையும், இருக்கிறவைகளையும், இவைகளுக்குப்பின்பு சம்பவிப்பவைகளையும் எழுது" என்று கூறுகிறது. வெளிப்படுத்தின விசேஷம் 4:1ல் யோவானுக்கு, "இங்கே ஏறிவா, இவைகளுக்குப்பின்பு சம்பவிக்கவேண்டியவைகளை உனக்குக் காண்பிப்பேன்" என்று கூறப்பட்டது. வெளிப்படுத்தின விசேஷம் புத்தகமானது நிகழ்காலம் (இருக்கிற வகையில் விஷயங்கள்) மற்றும் எதிர்காலம் (இந்தப் புத்தகம் எழுதப்பட்ட வேளைக்குப் பின்வர இருந்த எதிர்காலம்) ஆகியவற்றை உள்ளடக்குகிற நாள்வரிசையிலான திட்டத்தில் ஒருங்கமைக்கப்பட்டது என்று

இவ்விரு வசனப்பகுதிகளும் கூறுவதாகக் காணப்படுகிறது. என்ன இருக்கும், "இவைகளுக்குப்பின்பு" என்ன நடக்கும் என்பவற்றைப் பற்றி இவ்வசனப்பகுதி பேசுகிறது.வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தைப் படிக்கும்போது, அந்த வடிவமைப்பு ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டும்.

3. *எபிரெயருக்கு எழுதப்பட்ட நிருபம்.* எபிரெயருக்கு எழுதப்பட்ட நிருபத்தினால் இன்னொரு உதாரணம் அளிக்கப்படுகிறது. எபிரெயருக்கு எழுதப்பட்ட நிருபம் மிகச்சிறு வடிவமைப்புகளைக் கொண்டுள்ளது; இதன் எழுத்தாளர் உபதேசக் கருத்துக்களை ஏற்படுத்தி அதன் பின்பு தமது நிருபத்தை வாசிப்பவர்கள் விசுவாச விலக்கத்தைத் தவிர்த்து அதிகம் விசுவாசம் நிறைந்தவர்களாகும்படி புத்தி கூறினார் என்பது சாத்தியமாக உள்ளது. எபிரெயருக்கு எழுதப்பட்ட நிருபம் பெரிய வடிவமைப்பு ஒன்றையும் கொண்டுள்ளது. எபிரெயர் 10:18ல் எழுத்தாளர் ஒரு உச்ச கட்டத்தை அடைந்தார், அங்கு அவர் புதிய ஏற்பாட்டின்கீழ் இப்போது பாவங்களுக்கு மன்னிப்பு உண்டு என்பதை நிரூபிக்கப் பழைய ஏற்பாட்டைப் பயன்படுத்தினார். பின்பு அவர் பின்வரும் கருத்தை ஏற்படுத்தினார்:

> ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்தஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால், அந்த மார்க்கத்தின்வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும், தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும் துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம். அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்; வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே. மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து; சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக் கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும் (எபிரெயர் 10:19-25).

கிறிஸ்துவானவர் மேன்மையானவராக இருக்கிறார், ஆகையால் நாம் மன்னிப்பைப் பெற்றிருக்கிறோம் என்ற சத்தியத்தில் உச்சிநிலை அடைந்த தேவனிடத்தில் கிட்டிச் சேர முடியும் என்பதை உபதேசம் விவாதிக்கிறது - மற்றும் அந்த உண்மைகள் நடைமுறையிலான புத்திகூறுதல்களுக்கு வழிநடத்துகின்றன.

4. *ரோமருக்கு எழுதப்பட்ட நிருபம்.* ரோமருக்கு எழுதப்பட்ட நிருபம் கவனநிறைவுடன் ஒருங்கமைக்கப் பட்டுள்ளது. முதல் பதினோரு அதிகாரங்கள் முக்கியமான உபதேச விஷயங்களைக் கையாளுகின்றன. பின்பு ரோமர் 12:1ல் பவுல், "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று,

தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை" என்று எழுதினார். "அப்படியிருக்க" என்ற வார்த்தை, இந்த நிருபத்தின் இவ்விடத்தில் பவுல் ஒரு புதிய பகுதியை அறிமுகப்படுத்தினார் என்ற குறிப்புத் தெரிவிக்கிறது.[1] இவ்வசனத்தில் உள்ள, "அப்படியிருக்க, ... தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு" என்ற சொற்றொடர், அந்த இடம் வரையிலும் எழுதப்பட்டிருந்த யாவற்றையும் குறிக்கிறது மற்றும் அது ரோமர் 12ல் தொடங்குகிற நடைமுறை அறிவுறுத்தல்கள் மற்றும் புத்திமதிகள் ஆகியவற்றிற்கு வாசகரைத் தயார்செய்கிறது.

5. *பிலேமோனுக்கு எழுதப்பட்ட நிருபம்.* பிலேமோனுக்கு எழுதப்பட்ட நிருபம், சொல்லாட்சித் திறன் சார்ந்த வகையில் ஒருங்கமைக்கப்பட்டுள்ளது.[2] அதாவது பிலேமோன் சிலவிஷயங்களைச் செய்ய வேண்டும் என்று பவுல் விரும்பினார், மற்றும் அவர் - அதைச் செய்யும்படி பிலேமோன் ஏற்றுக்கொள்ளும்படி செய்வதற்கு - ஊக்கமூட்டுதலை ஒன்றின்மீது இன்னொன்றாகக் குவித்தார் - அனேகமாக குறைந்த அளவு இணங்கச் செய்யும் ஆழ்ந்த சிந்தனையில் இருந்து மிகவும் இணங்கச் செய்யும் ஆழ்ந்த சிந்தனைகளுக்கு அவர் கடந்து சென்றிருக்கலாம்.

6. *சுவிசேஷங்கள்.* சுவிசேஷப் புத்தகங்கள் நாள்வரிசை அமைவின்படி வரிசைப்படுத்தப் பட்டுள்ளன. ஒவ்வொரு புத்தகத்திலும் மற்ற வடிவமைப்புகள் இருக்கையில், இயேசு வாழ்ந்தது, அற்புதங்கள் நிகழ்த்தியது மற்றும் போதித்தது, சிலுவையில் அறையப்பட்டது மற்றும் மரித்தோரில் இருந்து உயிர்த்தது ஆகியவற்றைப் பற்றிய நாள்வரிசை முறைமையில், சுவிசேஷங்கள் யாவற்றிலும் ஒரு பொதுவான உடன்பாடு இருப்பது தெளிவாகிறது.

7. *அப்போஸ்தலருடைய நடபடிகள்.* அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகமானது, புவியியல் ரீதியான வரிசை அமைவுகள் என்று நாம் அழைக்கக் கூடிய ஏற்பாடு ஒன்றைக் கொண்டுள்ளது, இது நடபடிகள் 1:8ல் இயேசுவின் பின்வரும் வார்த்தைகளின் அடிப்படையில் அமைந்துள்ளது: "பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும் [அதிகாரம் 1-7], யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும் [அதிகாரம் 8-12], பூமியின் கடைசிபரியந்தமும் [அதிகாரம் 13-28] எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்."

8. *ஆதியாகமம்.* ஆதியாகமத்தை நாம் பல்வேறு வகைகளில் வரைகுறிப்பிடலாம் என்று இருக்கையில், இந்தப் புத்தகத்தை எழுதிய ஏவுதல் பெற்ற எழுத்தாளர் இதை நமக்காக ஏற்கனவே ஒருங்கமைத்துள்ளார் என்பதை நாம் கவனிப்பது அவசியம். அவர் toledoth என்று கூறிய எபிரெய வார்த்தையை வேதாகமத்தில் "வம்சவரலாறு" என்று பத்து முறைகள் மொழிபெயர்த்ததன் மூலம் இதைச் செய்துள்ளார். ஆதியாகமத்தில் உள்ள ஒரு வசனப்பகுதிக்கு நாம் விளக்கம் அளிக்கையில், எழுத்தாளராலேயே அளிக்கப்பட்டுள்ள வடிவமைப்பை நாம் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

9. *யோபுவின் சரித்திரம்.* யோபுவின் சரித்திரம் என்ற புத்தகம் ஒரு தெளிவான வடிவமைப்பை கொண்டுள்ளது: முதல் இரண்டு அதிகாரங்கள் உரைநடையில் உள்ளன மற்றும் கடைசி அதிகாரம் உரைநடையில் உள்ளது. இவற்றிற்கு இடையில் கவிதை நடையிலான முப்பத்து ஒன்பது அதிகாரங்கள் உள்ளன. இந்த வடிவத்தை உற்றுக் கவனித்தல் மூலம் நாம், இந்தப் புத்தகத்தை

மூன்று பகுதிகளாகப் பிரிக்க முடியும்; முகவுரை, கலந்துரையாடல் மற்றும் நிறைவுரை. யோபுவின் புத்தகத்தினுடைய அர்த்தத்தைப் புரிந்துகொள்வதற்கு நாம், இந்தப் புத்தகத்தின் பெரும்பான்மையான பகுதியான அந்த முப்பத்து ஒன்பது அதிகாரங்களைப் புறக்கணிக்கத் துணியாதிருக்க வேண்டும்.

10. *யோனா.* யோனாவின் புத்தகம் எதைப் பற்றியதாக உள்ளது? இதற்கான விடை அந்தப் புத்தகத்தின் கடைசி அதிகாரத்தில், யோனா தேவனுடைய அறிவுறுத்துதல்களைத் தொடக்கத்தில் பின்பற்ற மறுத்தமைக்கான காரணத்தைக் கொடுக்கும் பகுதியில் உள்ளது. யோனா 4:1-3ல் நாம், நினிவே நகரத்து மக்களின் மனந்திரும்புதலுக்கு யோனாவின் மறுசெயல் பற்றிப் பின்வருமாறு வாசிக்கிறோம்:

> யோனாவுக்கு இது மிகவும் விசனமாயிருந்தது; அவன் கடுங்கோபங்கொண்டு, கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணி: "ஆ கர்த்தாவே, நான் என் தேசத்தில் இருக்கும்போதே நான் இதைச் சொல்லவில்லையா? இதினிமித்தமே நான் முன்னமே தர்ஷீசுக்கு ஓடிப்போனேன்; நீர் இரக்கமும் மன உருக்கமும் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவரும், தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமான தேவனென்று அறிவேன். இப்போதும் கர்த்தாவே, என் பிராணனை என்னைவிட்டு எடுத்துக்கொள்ளும்; நான் உயிரோடிருக்கிறதைப்பார்க்கிலும் சாகிறது நலமாயிருக்கும்" என்றான்.

யோனாவைப் பொறுத்தமட்டில், அவர் தாம் நினிவேக்குச் சென்றால், மக்கள் மனந்திரும்புவார்கள் மற்றும் தேவன் அவர்களை அழிக்கமாட்டார் என்பதால், அவர் நினிவேக்குச் செல்ல விரும்பாதிருந்தார்! நினிவே நகரம் அழிக்கப்பட வேண்டும் என்று யோனா விரும்பினார்! யோனா - மற்றும் மறைமுகமான கருத்தில் இஸ்ரவேல் மக்கள் - தேவனைப் போலவே, நினிவே நகர மக்கள் மீது அன்புகூர்ந்து, அவர்கள் மனந்திரும்புவதை விரும்பி, அவர்கள் மனந்திரும்பியபோது அகம் மகிழ வேண்டியிருந்தது. அந்தச் செய்தியை நாம் எவ்வாறு கண்டறிகிறோம்? யோனா என்ற இந்தப் புத்தகத்தின் கட்டமைப்பை ஆழ்ந்து சிந்தித்து, இதன் வடிவமைப்பை உற்றுக்கவனித்து, இதன் உச்சக் காட்சியைக் கவனிப்பதன் மூலம்தான். கடைசியில் நடந்த நிகழ்வுதான் ஏவுதல் பெற்ற எழுத்தாளர் வலியுறுத்த நோக்கங் கொண்டதாக உள்ளது.

இந்த பத்து உதாரணங்கள் திட்டவட்டமானவையாக இருப்பதில்லை; இவைகள் விவரிப்பாக இருக்க அர்த்தப்பட்டவைகளாக உள்ளன. இவைகள் நம்மை ஊக்குவிக்க வேண்டும், இந்தப் புத்தகம் முழுமையும் எதைப்பற்றியது என்று நாம் தீர்மானித்த பின்பு நாம், இந்தப் புத்தகம் எவ்வாறு ஒருங்கமைக்கப் பட்டுள்ளது அல்லது வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதைக் கண்டறிய நாடவேண்டும்.

## இந்தப் புத்தகத்திற்குள்ளாக இருக்கும் வடிவமைப்புகள்

இந்தப் புத்தகத்தின் *உள்ளாக இருக்கும்* பெரிய வடிவமைப்புகள் (இந்தப் புத்தகம் முழுமைக்குமான வடிவமைப்புடன் நேரெதிராக வைக்கப்படுகையில்)

வடிவமைப்பின் இரண்டாவது “அடுக்கை” கொண்டுள்ளன.

**புத்தகத்திற்குள்ளாக இருக்கும் வடிவமைப்புகளைக் கண்டறிவது எவ்வாறு**

புத்தகத்திற்குள்ளாக இருக்கும் வடிவமைப்புகளைக் கண்டறிவதற்கு நாம், இதன் எழுத்தாளரே விட்டுச் சென்றுள்ள வார்த்தை “குறிப்புகள்” அல்லது “உளவுக் குறிப்புகளை” கண்ணோக்க முடியும். எவ்வகையான “குறிப்புகள்” கண்டறியப்படலாம்? ஒரு குறிப்பிட்ட வசனப்பகுதியை ஒருங்கமைக்க எழுத்தாளர் பயன்படுத்தியிருக்கக் கூடிய இரண்டு முறைமைகள் பின்வருமாறு:

1. *திறவுகோல் வார்த்தைகள் அல்லது திறவுகோல் சொற்றொடர்கள் திரும்பத் திரும்பப் பயன்படுத்தப்படுதல்.* திறவுகோல் வார்த்தைகளின் அல்லது சொற்றொடர்களின் பயன்பாடு பற்றிப் பிரசங்கியின் புத்தகம் ஒரு உதாரணத்தை அளிக்கிறது. “சூரியனுக்குக் கீழே” என்ற சொற்றொடர் (ஏறக்குறைய முப்பது முறைகள்) திரும்பத் திரும்பப் பயன்படுத்தப் பட்டுள்ளதை நாம் கவனிக்கும்போது, எதிலும் தீமையையே காணும் கண்ணோக்கம் கொண்ட இப்படிப்பட்ட ஒரு புத்தகம், வேத வசனமாகக் கண்ணோக்கப்படக் கூடுவது எவ்வாறு என்ற புதிருக்கான விடையானது பெரிதும் தீர்க்கப்படுகிறது. எல்லாம் மாயை என்று இந்த வேதவசனப் பகுதி கூறும்போது அது, “சூரியனுக்குக் கீழே” - தேவன் இல்லாத நிலையில் இந்த வாழ்வில் - அனுபவம் பற்றிப் பேசுகிறது. 1 மற்றும் 2 இராஜாக்கள் புத்தகத்தில் ஒவ்வொரு இராஜாவினுடைய ஆளுகை பற்றிய தொகுப்புரையைத் தரும்போது, ஒரு சூத்திரத்தை நயமான பாணியில் பயன்படுத்தி, அந்த இராஜக்கள் ஒவ்வொருவரும் நல்லவராக இருந்தாரா அல்லது கெட்டவராக இருந்தாரா என்பதைப் பற்றிக் குறிப்பிட்டு, தீர்ப்பு ஒன்றைக் கூறினார்.[4] நியாயாதிபதிகள் புத்தகத்தில் மூன்றாவது உதாரணம் அளிக்கப்பட்டுள்ளது. நியாயாதிபதிகள் 17-21ல் இதன் எழுத்தாளர், “அந்நாட்களில் இஸ்ரவேலிலே ராஜா இல்லை” என்ற சொல் விளக்கத்தை மூன்று முறை உள்ளடக்கினார் (நியாயாதிபதிகள் 18:1; 19:1; 21:25). இந்த அதிகாரங்களில் அவர் எழுதியதை ஏதோ ஒரு வகையில் ஆய்வுக் கருத்துக் கூற்றுடன் தொடர்புபடுத்துவதை அவர் நோக்கங் கொண்டிருந்தார் என்பது தெளிவு.[5]

2. *Inclusio என்று சில வேளைகளில் அழைக்கப்படும் கருவியைப் பயன்படுத்துதல்.* ரிச்சர்டு N. சோலின் அவர்களால் விளக்கப்பட்டபடி “*inclusio*” என்பது வேதவசனங்களில், “திறவு சொற்றொடர் அல்லது கருத்து என்பது முடிவுப் பகுதியில் மறுபடி பொழிப்புரைக்கப்பட்டு அல்லது வேறுவகையில் திரும்ப உரைக்கப்பட்டுவதற்கு” காணப்படும் ஒரு கருவியாக உள்ளது.[6] தமஸ்குவின் அழிவைப் பற்றிய அறிவிப்பான “கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்” என்பது போன்ற கூற்றைக் கொண்டு தொடங்குகிறது மற்றும் முடிகிறது என்ற வகையில், ஆமோஸ் 1:3-5 ஒரு உதாரணத்தை அளிக்கிறது. எசேக்கியேல் 18:25-29 இன்னொரு உதாரணத்தை அளிக்கிறது, அதில் 25 மற்றும் 29 ஆகிய வசனங்கள் “உங்கள் வழிகள் அல்லவோ செம்மையல்லாததாயிருக்கிறது” என்ற வார்த்தைகளைக் கொண்டு முடிகிறது. மாற்கு சுவிசேஷம் “தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் ஆரம்பம்” என்ற திறவு வார்த்தைகளுடன் இந்தக் கருவியைப் பயன்படுத்துகிறது (மாற்கு 1:1)

மற்றும் பிற்பாடு முடிவிற்கு அண்மையில், இயேசு சிலுவையில் அறையப்பட்ட வேளையில், ரோமப்படை வீரர் ஒருவர் "மெய்யாகவே இந்த மனுஷன் தேவனுடைய குமாரன்" என்று வியப்புடன் கூறியதைப் பதிவு செய்கையிலும் இந்தக் கருவியைப் பயன்படுத்துகிறது (மாற்கு 15:39). இவ்வாறு மாற்கு, தமது சுவிசேஷ விபரம் வலியுறுத்த விரும்பியதைச் சுட்டிக்காண்பித்தார்.

**ஒரு புத்தகத்தின் உள்ளாக இருக்கும் வடிவமைப்பைக் கண்டறிவதில் உள்ளடங்கி இருப்பது என்ன?**

1. நாம் விளக்கம் அளிக்க முயற்சி செய்யும் வசனப்பகுதிக்கான அல்லது வசனப்பகுதி காணப்படும் பகுதிக்கான *வரைகுறிப்பு ஒன்றை ஏற்படுத்துவதில் உள்ளடங்குகிற வடிவமைப்பை அதன் மிக எளிய வடிவில் கண்ணோக்குதல்.* முறையான வரைகுறிப்பு ஒன்று தேவையற்றதாக அல்லது சாத்தியமற்றதாக இருக்கலாம். இருப்பினும் நாம் ஒரு வசனப்பகுதியை வரைகுறிப்பிட இயலாவிட்டாலும், அதன் எழுத்தாளர் ஒரு கருத்தில் இருந்து அடுத்த கருத்திற்கு எவ்வாறு கடந்து சென்றார் என்பதைக் காணுதல் வழக்கமாக சாத்தியமானதாகவே உள்ளது. எடுத்துகாட்டாக சங்கீதம் 19ல் சங்கீதக்காரர் முதலில் தேவனுடைய செயல்களை விவரித்தார் (வசனங்கள் 1-6), பின்பு அவர் தேவனுடைய வசனத்தைப் புகழ்ந்தார் (வசனங்கள் 7-11), மற்றும் அப்படிப்பட்ட ஆழ்ந்த சிந்தனைகளுக்கு மனிதர் எவ்வாறு பதில் அளிக்க வேண்டும் என்பதைப் பற்றிப் பேசுவதைக் கொண்டு முடித்தார் (வசனங்கள் 12-14).

சில வேளைகளில் ஒரு வசனப்பகுதிக்கு வரைகுறிப்பிடுவது சாத்தியமானதாக *உள்ளது.* ஒரு வசனப்பகுதி எவ்வாறு வரைகுறிப்பிடப்பட முடியும் என்பதற்கு ஒரு விவரிப்பு என்ற வகையில், 1 கொரிந்தியர் 15ன் வரைகுறிப்பைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள். 1 கொரிந்தியர் 15ஐ வாசிக்கும்போது நாம், இந்த அதிகாரம் உயிர்த்தெழுதலைப் பற்றியது என்று சுலபமாகக் காண முடியும். இது உயிர்த்தெழுதலைப் பற்றிக் கூறுவது என்ன? பொதுவான உயிர்த்தெழுதல் இராது என்ற தவறான கண்ணோட்டத்திற்கு இந்த அதிகாரம் பதில் அளிக்கிறது (15:12).

இந்த அதிகாரத்திற்கு வரைகுறிப்பிடுவதில் இருந்து விளையக்கூடிய உற்றுநோக்குதல்களின் தொகுப்புரை ஒன்று இங்கு தரப்படுகிறது. பொதுவான உயிர்த்தெழுதல் இராது என்ற கள்ள உபதேசத்திற்கு பவுல் பதில் அளித்தார், முதலில் அவர், கொரிந்தியர்களுக்குப் போதிக்கப்பட்டு இருந்ததும் அவர்கள் ஏற்கனவே விசுவாசித்து இருந்ததும் என்ன என்பதில் இருந்து விவாதித்ததன் மூலம் பதில் அளித்தார். செயல்விளைவில் அவர், பொதுவான உயிர்த்தெழுதல் இல்லை என்றால், கிறிஸ்து உயிர்த்து எழவில்லை என்றாகிறது, கிறிஸ்தவம் பயனற்றது என்றாகிறது மற்றும் கிறிஸ்தவர்கள் இழந்துபோகப்பட்டுள்ளனர் என்றாகிறது என்று கூறினார். இரண்டாவதாக அவர், கிறிஸ்து உயிர்ப்பிக்கப்பட்டார் என்றும் அவரது உயிர்த்தெழுதல் பொதுவான உயிர்த்தெழுதலுக்கு ஒரு உறுதிப்பாட்டை அளிக்கிறது என்றும் நிச்சயப்படுத்தினார். மூன்றாவதாக அவர், தமது மற்றும் அவர்களின் நடைமுறைகளில் இருந்து, ஒரு உயிர்த்தெழுதல் இருக்க வேண்டும் என்பதை காரணகாரியத்துடன் நிரூபித்தார்: அவர்கள் உயிர்த்தெழுதலை முன்னெதிர் நோக்காதவர்கள் போன்று நடந்துகொண்டது ஏன்? நான்காவதாக அவர், மரித்தோர் எவ்வகையான சரீரங்களைக் கொண்டிருப்பார்கள் என்று

கற்பனை செய்வது சாத்தியமற்றதாக இருப்பதால் உயிர்த்தெழுதல் இருக்க முடியாது என்ற நடைமுறை விவாதித்திற்குப் பதில் அளித்தார். அந்தக் கேள்விக்கு அவர், உயிர்த்து எழும் நாம் கொண்டிருக்கப் போகும் சரீரங்களின் வகையைப் பற்றிக் கலந்துரையாடியதன் மூலம் பதில் அளித்தார். அவர் தாம் கூறியவற்றில் இருந்து பின்வரும் நடைமுறை முடிவு ஒன்றை தரவழைத்ததன் மூலம் இந்த அதிகாரத்தை முடித்தார்: "ஆகையால், ... நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக" (15:58).

1 கொரிந்தியர் 15ஐப் பற்றிய இந்தப் பகுத்தாய்வை நாம் ஒப்புக்கொண்டாலும் இல்லை என்றாலும், நாம் புரிந்துகொள்வதற்கு ஆர்வமாக இருக்கும் எந்த வசனப்பகுதியையும் பகுத்து ஆய்வதற்கு செயல் முறையின் இவ்வகையைப் பயன்படுத்த நாம் கற்றுக்கொள்ள முடியும்.

2. *இத்துடன் கூடுதலாக, வடிவமைப்பைக் கண்டறிவதில், எழுத்தாளர் தமது கருத்தைக் கொண்டு வருவதற்குப் பயன்படுத்திய ஒருங்கமைப்புக் கொள்கைகளைப் பற்றிக் கவனித்துக் குறிப்பெடுத்தலும் உள்ளடங்கியிருக்கிறது,* இதற்கான உதாரணம் ஒன்று ஆமோசின் புத்தகத்தில் காணப்பட முடியும். 1 மற்றும் 2ம் அதிகாரங்களில் ஆமோஸ், பின்வரும் ஒரே வகையான சொல்விளக்கத்தை எட்டுமுறைகள் பயன்படுத்தினார்: "தமஸ்குவினுடைய (அல்லது மற்ற சில இடங்களினுடைய) மூன்று பாதகங்களினிமித்தமும், நாலு பாதகங்களினிமித்தமும், நான் அதின் ஆக்கினையைத் திருப்பமாட்டேன்" (1:3). ஆமோஸ் என்ன கூறினார்? "மூன்று மற்றும் நாலு" என்பதன் மூலம் அர்த்தப்படுத்தப்படுவது என்ன? ஆமோஸ் பின்வருவது போன்ற ஒரு கருத்தை விளக்கப்படுத்தினார்: "மூன்று போதுமானதாக உள்ளது; நான்கு என்பது போதுமானதற்கும் அதிகமானதாக உள்ளது!" இவ்விஷயத்தில் நான்கு குற்றங்கள் என்பவை தேவனுடைய தண்டனையைப் பெறுவதற்குப் போதுமானதற்கும் அதிகமானவைகளாக இருந்தன.

ஏறக்குறைய ஒரே விஷயத்தை ஆமோஸ் எட்டு முறைகள் கூறியது ஏன்? ஆமோஸ், பிரிவுபட்ட இராஜ்யத்தின் நாட்களின்போது, வடக்கு இராஜ்யத்திற்கு இஸ்ரவேல் மக்களுக்கென்று அனுப்பப்பட்டிருந்தார். முதல் ஏழு அறிவிப்புகள் இஸ்ரவேல் நாட்டைச் சுற்றிலும் இருந்த மற்ற நாடுகளுக்கு எதிராக ஏற்படுத்தப்பட்டன என்பதைக் கவனியுங்கள்,[7] மற்றும் இஸ்ரவேலுக்கான செய்திக்கு முந்திய ஏழாவது அறிவிப்பு - தெற்கு இராஜ்யமும் இஸ்ரவேலின் "சகோதரியுமான" - யூதாவுக்கு எதிராகப் பேசப்பட்டது. இந்தச் செய்தியை முதன்முதலாகக் கேள்விப்பட்ட அல்லது வாசித்தவர்களுக்கு இது கொண்டிருக்கக் கூடிய செயல்விளைவு என்ன? இவ்வசனப்பகுதி ஒரு உச்சக்காட்சியைக் கட்டி எழுப்புவதாக உள்ளது. வடக்கு இராஜ்யத்தில் இருந்தவர்கள், தங்களைச் சுற்றிலும் இருந்த நாடுகளுக்கு எதிரான அறிவிப்புகளைக் கேள்விப்பட்டபோது, தீர்க்கதரிசியின் வார்த்தைகளுக்கு "ஆமென்!" என்று கூறியதை ஒருவர் கற்பனை செய்ய முடியும். இதன் பின்பு தீர்க்கதரிசி அவர்களிடம் திரும்பி, "*இஸ்ரவேலின்* மூன்று பாதகங்களினிமித்தமும் நாலு பாதகங்களினிமித்தமும், நான் *அவர்களுடைய* ஆக்கினையைத் திருப்பமாட்டேன்" என்று கூறினார் (2:6; என்னால் வலியுறுத்தப்படுகிறது). திடீரென்று இஸ்ரவேல் மக்கள், தங்கள் நாடு மற்ற எந்த நாட்டைக் காட்டிலும் சிறந்ததாக இருக்கவில்லை என்பதைக்

காணும்படிக் கட்டாயப்படுத்தப்பட்டனர். மற்ற நாடுகளின் ஆக்கினைத் தீர்ப்பைக் கேள்விப்படுவதில் அவர்கள் அகம் மகிழ்ந்து இருந்தனர்; இப்போது அவர்களின் அகம் மகிழ்வு அதிர்ச்சியாக மாறிற்று, மற்றும் தங்களின் நாடும்கூட ஆக்கினைத் தீர்ப்புக்கு உட்பட்டதை அறிந்தபோது அவர்கள் ஒருவேளை குற்ற உணர்வு பெற்றிருக்கலாம்.

இருப்பினும் விளக்கம் அளித்தலைப் பொறுத்தமட்டில், ஆமோஸினால் பயன்படுத்தப்பட்ட நயமான கருவிகள் வேதாகம மாணவரால் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என்பதே இங்கு பாடமாக உள்ளது.

*3. வடிவமைப்பைக் கண்டறிதல் என்பதில், நாம் ஒரு எடுத்துரைப்பிற்கு அல்லது வரலாற்றிற்கு விளக்கம் அளிக்கும்போது, திட்ட அமைவைக் கண்ணோக்குதலும் உள்ளடங்கி இருக்கிறது.* “திட்ட அமைவு” என்பது ஒரு புதிய கண்டுபிடிப்பு அல்ல. மக்கள் வரலாறுகளைக் கூறிக்கொண்டிருந்த வரையிலும், அவர்கள் அதைச் செய்வதற்கு ஒரே விதமான முறைமைகளைப் பயன்படுத்தி இருந்தனர். திட்ட அமைவில் முன்னேற்றம் என்பது அந்த முறைமைகளில் ஒன்றாக உள்ளது. திட்ட அமைவிற்காக நாம் அதைக் கண்ணோக்குவதில்லை என்பது உண்மை. மாறாக நாம், அது எழுத்தாளரின் நோக்கத்தை பற்றி வெளிப்படுத்துவது என்ன என்பதில் ஆர்வமாக இருக்கிறோம்.

எடுத்துக்காட்டாக, எஸ்தரின் சரித்திரம் என்ற புத்தகம் எதைப் பற்றியதாக உள்ளது? இது மிக சுலபமாகப் பின்பற்றக் கூடிய திட்ட அமைவு வரிசையுடன், உள்ளாகப் பிணைக்கப்பட்ட, பொழுது போகச் செய்யவும் கூடிய ஒரு வரலாற்றை நமக்குக் கூறுகிறது. அடிப்படையில் இந்தக் திட்ட அமைவு, யூதர்களை அழிக்கத் தேடிய ஆனால் எபிரெயப் பெண்ணான எஸ்தரின் இடையீட்டால் வீணாக்கப்பட்ட திட்டத்தைக் கொண்ட ஆமோன் என்ற பொல்லாத மனிதனை உள்ளடக்குகிறது. இந்தப் புத்தகம் போதிப்பது என்ன? யூதர்களுக்கு எதிர்த்து நின்றவர்கள் வெற்றியடைய மாட்டார்கள், ஏனென்றால் யூதர்கள் தேவனுடைய மக்களாக இருந்தனர்! எஸ்தரின் சரித்திரம் என்ற புத்தகத்தை அல்லது அந்தப்புத்தகத்தின் ஏதாவதொரு வசனப்பகுதியைப் புரிந்துகொண்டு பாராட்டுவதற்கு, நாம் அதன் திட்ட அமைவைக் காணக்கூடியவர்களாக இருக்க வேண்டும்.

## முடிவுரை

வடிவமைப்புகள் பற்றிய உதவியை, எழுதப்பட்ட பல்வேறு ஆதாரமூலங்களில் கண்டறிய முடியும் மற்றும் நாம் படிக்கும் வசனப்பகுதியில் மற்றவர்கள் கண்டறிந்துள்ள வடிவமைப்புகள் பற்றி ஆழ்ந்து சிந்திக்கத் தாராளமாக உணரவேண்டும். இருப்பினும் நாம், இந்த வடிவமைப்புகளை நாமே கண்டறிய முயற்சி செய்ய வேண்டும். பெரிய வடிவமைப்புகளை ஆராயும்போது நாம், சில அடிப்படை கேள்விகளை மனதில் கொள்ள வேண்டும். முதலாவது, இந்தப் புத்தகம் முழுவதிலும் எழுத்தாளர், எதைக் கூற முயற்சி செய்தார்? இரண்டாவது, அதை அவர் எவ்வாறு கூறினார்? அதாவது, செய்தியைக் கொண்டு வருவதற்கு, அவர் தமது சிந்தனைகளையும் பாடக்கருத்துக்களையும் எவ்வாறு அமைவுபடுத்தினார்? இந்தக் கேள்விகளுக்குப் பதில் அளிக்கக் கற்றுக்கொண்ட பின்பு நாம், ஒரு குறிப்பிட்ட வசனப்பகுதியில் உள்ள சிறிய வடிவமைப்புகள்

பற்றிக் கேட்கத் தொடங்க முடியும். எந்த ஒரு வசனப் பகுதிக்கும் வெற்றிகரமாக விளக்கம் அளிப்பதற்கு நாம், இந்தக் கேள்விகளைக் கேட்டு இவற்றிற்குப் பதில் அளிப்பது அவசியமாக உள்ளது.

## 1 கொரிந்தியர் 15ன் வடிவமைப்பு: உயிர்த்தெழுதல்

I. உயிர்த்தெழுதல் என்பது சுவிசேஷத்தைப் பிரசங்கித்தலின் அத்தியாவசியமான ஒரு பகுதியாக உள்ளது.
   A. கொரிந்தியர்கள் சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டு இருந்தனர் (வசனங்கள் 1, 2).
   B. அவர்கள் கேள்விப்பட்டிருந்த சுவிசேஷம் (''முதலில்'') பின்வருபவற்றை உள்ளடக்கி இருந்தன:
      1. கிறிஸ்து நமது பாவங்களுக்காக மரித்தார் (வசனம் 3).
      2. கிறிஸ்து அடக்கம் பண்ணப்பட்டார் (வசனம் 4).
      3. கிறிஸ்து மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் (வசனம் 4).
      4. கிறிஸ்து பின்வருபவர்களுக்குத் தரிசனமானார்:
         a. கேபாவுக்கு (வசனம் 5).
         b. பன்னிருவருக்கு (வசனம் 5).
         c. ஐநூறுக்கும் மேற்பட்ட சகோதரர்களுக்கு (வசனம் 6).
         d. யாக்கோபுக்கு (வசனம் 7).
         e. அப்போஸ்தலர்கள் யாவருக்கும் (வசனம் 7).
         f. பவுலுக்கு (வசனங்கள் 8-10).
   C. இதுவே பவுல் பிரசங்கித்த விஷயமாகவும் கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்கள் விசுவாசித்த விஷயமாகவும் இருந்தது (வசனம் 11).

II. மரித்தோர் உயிர்த்தெழுதலை மறுத்தல் என்பது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை மறுப்பதாக உள்ளது, இது பயங்கரமான விளைவுகளைக் கொண்டிருக்கும்[8] (வசனங்கள் 12, 13).
   A. உயிர்த்தெழுதல் இல்லை என்றால், கிறிஸ்துவும் உயிர்ப்பிக்கப்படவில்லை என்றாகிறது, மற்றும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தலுக்கான விளைவுகள் பாழாவதாக உள்ளது.
      1. கிறிஸ்து உயிர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை என்றால், பவுலின் பிரசங்கித்தல் விருதாவாக (வீணானதாக) இருந்தது (வசனம் 14).
      2. கிறிஸ்து உயிர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்றால், கிறிஸ்தவர்களின் விசுவாசமும் விருதாவாக (வீணானதாக) இருந்தது (வசனம் 14).
      3. கிறிஸ்து உயிர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்றால், அப்போஸ்தலர்கள் தேவனைத் தவறாகப் பிரதி நிதித்துவப்படுத்தி இருந்தனர் (வசனம் 15).
   B. மரித்தோர் உயிர்ப்பிக்கப்படுவதில்லை என்றால், கிறிஸ்துவும் உயிர்ப்பிக்கப் படவில்லை என்றாகிறது, மற்றும் தனிநபரான

கிறிஸ்தவருக்கு விளைவுகள் அதிகம் குறிப்பிடத் தக்கவைகளாக உள்ளன (வசனம் 16).

1. கிறிஸ்து உயிர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்றால், நமது விசுவாசம் வீணானதாக இருக்கிறது (வசனம் 17).
2. கிறிஸ்து உயிர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்றால், நாம் இன்னமும் நமது பாவங்களிலேயே இருப்போம் (வசனம் 17).
3. கிறிஸ்து உயிர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்றால், கிறிஸ்துவுக்குள் மரித்தோர் கெட்டிருப்பார்கள் (வசனம் 18).
4. கிறிஸ்து உயிர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்றால், நாம் இந்த வாழ்வில் மாத்திரம் நம்பிக்கை உடையவர்களாக இருப்போம், மற்றும் நாம் மிகவும் பரிதபிக்கப்படத் தக்கவர்களாக இருப்போம் (வசனம் 19).

III. உண்மையிலேயே கிறிஸ்து மரித்தோரில் இருந்து உயிர்ப்பிக்கப்பட்டுள்ளார் (வசனம் 20).

A. அவரது உயிர்த்தெழுதல் இறையியல் ரீதியான தேவையாக இருந்தது.

1. ஆதாம் செய்ததை ஒன்றுமற்றுப் போகச் செய்வதற்காகக் கிறிஸ்து மரித்தோரில் இருந்து உயிர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தது.
   a. ஆதாம் மூலமாக மரணம் வந்தது; கிறிஸ்து மூலமாக உயிர்த்தெழுதல் வந்தது (வசனம் 21).
   b. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறோம்; கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுகிறோம் (வசனம் 22).
2. மரித்தோரின் உயிர்த்தெழுதலைக் கிறிஸ்து சாத்தியமாக்கினார்.
   a. அவர் "முதற்பலனானவர்," அதாவது முதலாவதாக உயிர்ப்பிக்கப்பட்டவர் (வசனம் 23).
   b. அவர் மறுபடியும் வரும்போது மற்றவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள் (வசனம் 23).
      (1) அந்த வேளையில், அவர் இராஜ்யத்தை தேவனிடம் ஒப்புக்கொடுப்பார் (வசனங்கள் 24, 25).
      (2) உயிர்த்தெழுதலினால் அவர், கடைசிச் சத்துருவான மரணத்தை அழிப்பார் (வசனம் 26).
      (3) குமாரன் தேவனுக்குக் கீழ்ப்பட்டிருப்பார் (வசனங்கள் 27, 28).

B. பரிசுத்தவான்களின் செயல்கள், உயிர்த்தெழுதலுக்கு ஒரு நடைமுறை நிரூபணத்தை அளிக்கின்றன.

1. மரித்தவர்களுக்காகச் சிலர் ஞானஸ்நானம் பெற்றனர் என்ற உண்மையானது அவர்கள் உயிர்த்தெழுதலில் நம்பிக்கை கொண்டிருந்தனர் என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது (வசனம் 29).

2. பவுலின் சொந்த வாழ்வே உயிர்த்தெழுதலுக்குச் சாட்சியம் தருகிறது (வசனங்கள் 30-32).
3. உலகப்பிரகாரமான வாழ்வை வாழ மறுத்தல் என்பது, உயிர்த்தெழுதலைக் கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கின்றனர் என்பதற்கு ஆதாரமாக உள்ளது (வசனங்கள் 32-34).
   a. உயிர்த்தெழுதல் உண்டு என்பதால், கிறிஸ்தவர்கள் வேறுவகையாக இருக்க வேண்டும் என்பதை அவர்கள் நினைவில் வைத்து கொள்ளுதல் முக்கியமானதாக உள்ளது (வசனம் 33).
   b. சிலர், தாங்கள் வாழ வேண்டிய வகையிலான ஒழுக்கம் நிறைந்த வாழ்வு நடையின் வகையின்படி வாழவில்லை (வசனம் 34). (உண்மையில் சிலர், உயிர்த்தெழுதல் இல்லை என்றால், நாம் எவ்வாறு வாழ்கிறோம் என்பதைப் பொருட்படுத்தத் தேவையில்லை என்று முடிவு செய்திருந்தனர்.)

IV. உயிர்த்தெழுப்பப்படும் சரீரத்தின் இயல்பை விளக்கப்படுத்த முடியும்[9] (வசனம் 35).
A. உயிர்த்தெழுப்பப்படும் சரீரம் வேறுபட்டிருக்கும்.
1. உயிர்த்தெழுதலில் என்ன நடக்கும் என்பதற்கான ஒரு விவரிப்பு என்ற வகையில், ஒரு விதை விதைக்கப்பட்டு அது பின்பு முளைக்கும்போது நடப்பது என்ன என்பதைப் பற்றிச் சிந்தித்துப்பாருங்கள்.
   a. தாவர வாழ்வானது விதைகளின் மரணத்தில் இருந்து வருகிறது (வசனம் 36).
   b. விதைத்தலில் இருந்து விளைவது விதைக்கப்பட்ட விதைகளில் இருந்து மாறுபட்டுள்ளது (வசனங்கள் 37-41).
      (1) தானியங்கள் அவை விளையச் செய்யும் தாவரத்தைப் போன்று இருப்பதில்லை (வசனங்கள் 37, 38).
      (2) உண்மையில், ஒவ்வொன்றிற்கும் அதன் உடலின் சுயவகையைத் தேவனே தருகிறார் (வசனங்கள் 39-41).
2. அவ்வாறே, உயிர்த்தெழுதலில், ‘‘விதைக்கப்பட்டது’’ (மரித்து அடக்கம் பண்ணப்பட்டது), விளைவதில் இருந்து மாறுபட்டிருக்கும் (வசனம் 42-44).
   a. அழிவுள்ளது - அழியாமையுள்ளது.
   b. கனவீனமுள்ளது - மகிமையுள்ளது.
   c. பலவீனமுள்ளது - பலமுள்ளது.
   d. ஜென்மசரீரம் - ஆவிக்குரிய சரீரம்.
B. புதிய சரீரம், ஆவிக்குரிய சரீரமாக இருக்கும்.
1. ஜென்ம (“இயல்பான”) சரீரம் ஒன்று இருப்பது எவ்வளவு

நிச்சயமோ, அவ்வளவு நிச்சயமாகவே, ஆவிக்குரிய சரீரம் ஒன்றும் உள்ளது (வசனம் 44). இது ஆதாம் மற்றும் கிறிஸ்து ஆகியோருக்கு இடையிலான நேர்மாறு ஒப்பீட்டில் தெளிவாகிறது.

a. முந்தின ஆதாம் ஜீவாத்துமாவானார்; இரண்டாவது ஆதாமோ உயிர்ப்பிக்கிற ஆவியானார் (வசனங்கள் 45, 46).

b. முந்தின ஆதாம் பூமிக்குரியவராக இருந்தார்; பிந்தின ஆதாமோ வானத்திற்கு உரியவராக இருக்கிறார் (வசனங்கள் 47, 48).

2. நாம், பிந்தின ஆதாமுடைய சாயலைத் தரித்துக் கொள்கிறோம் (வசனம் 49).

V. உயிர்ப்பிக்கப்படுபவர்கள் அழிவில்லாதவர்களாக, அழிவுக்கு உட்படாதவர்களாக ஆவார்கள்.

A. அவர்கள் அழிவில்லாதவர்கள் ஆவது அத்தியாவசியமாக உள்ளது (வசனம் 50).

B. அழிவில்லாமைக்கான மாற்றம் நடைபெறும்.

1. எப்போது? கடைசி எக்காளத்தின் போது (வசனங்கள் 51, 52).

2. என்ன நடைபெறும்?

a. மரித்தோர் அழிவில்லாதவர்களாக உயிர்ப்பிக்கப்படுவார்கள் (வசனம் 52).

b. உயிரோடு இருப்பவர்கள் மறுரூபமாக்கப்படுவார்கள் (வசனம் 52).

3. ஏன்? ஏனென்றால் இப்படிப்பட்ட ஒரு மாற்றம் அத்தியாவசியமானதாக உள்ளது (வசனம் 53).

C. இது நடைபெறும்போது, மரணத்தைத் தோல்வியடையச் செய்தல் என்பதே விளைவாக இருக்கும்.

1. எழுதப்பட்டபடியே இது நடைபெறும் (வசனங்கள் 54-56).

2. இயேசு கிறிஸ்துவினால் வெற்றிபெறப்பட்ட ஒரு ஜெயம் என்ற வகையில் இது நடைபெறும் (வசனம் 57).

VI. உயிர்த்தெழுதல் என்பது நிச்சயமாக நடைபெறுவதாக இருப்பதாலும் நாம் அழியாமை உள்ளவர்கள் ஆகப்போவதாலும், நாம் கர்த்தருடைய ஊழியத்தில் உறுதிப்பட்டவர்களாக, அசையாதவர்களாக நிலைத்திருக்க வேண்டும் (வசனம் 58).

---

குறிப்புகள்

[1]“நீங்கள் ஒரு ‘அப்படியிருக்க’ என்பதைக் காணும்போது, நீங்கள் நிறுத்தி அது ‘அங்கு இருப்பது’ ஏன் என்பதைக் காணவேண்டும்” என்று யாரோ ஒருவர் கூறினார். [2]“சொல் லாட்சித்திறன்” என்பது “இணங்கச் செய்தலின் கலை” என்று விளக்கப்படுத்தப்படலாம்.

*பிலேமோனுக்கு எழுதப்பட்ட நிருபம் ''சொல்லாட்சித்திறனுடன் ஒருங்கமைக்கப்பட்டுள்ளது'' அதாவது, அதன் வாசகரை (வாசகர்களை) மிகவும் இணங்கச் செய்யும் வகையில் அது ஒருங்கமைக்கப்பட்டுள்ளது.* [3]*காண்க ஆதியாகமம் 2:4; 5:1; 6:9; 10:1; 11:10; 11:27; 25:12; 25:19; 36:1; 37:2.* [4]*உதாரணத்திற்கு காண்க 2 இராஜாக்கள் 12:1-3; 13:1-3, 10-13.* [5]*இந்தக் கூற்றானது நியாயாதிபதிகள் புத்தகத்தின் கடைசிப் பகுதியுடன் தொடர்புபடுகிறது, இது இந்தப் புத்தகத்தின் முதல் பதினாறு அதிகாரங்களின் ஒரு பிற்சேர்க்கையாக இருப்பதைக் காணமுடியும். ஆகையால் "அந்நாட்களில் இஸ்ரவேலிலே ராஜா இல்லை" என்பது நியாயாதிபதிகள் புத்தகம் முழுவதின் ஆய்வுக்கருத்தாக உள்ளது என்று கூறுவது மிகச்சரியானதாக இராது.* [6]Richard N. Soulen, *Handbook of Biblical Criticism,* 2d ed., rev. and aug. (Atlanta: John Knox Press, 1981), 94. [7]*தீர்க்கதரிசி, தமஸ்கு (சீரியா அல்லது ஆராம்), காசா (பெலிஸ்தியா அல்லது பெலிஸ்தர்களின் நாடு), தீரு, ஏதோம், அம்மோன், மோவாப் மற்றும் யூதா ஆகியவற்றின் மீது நியாயத்தீர்ப்பை அறிவித்தார்.* [8]*கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை ஏற்றுக்கொண்டு, அதே வேளையில், மரித்தோர் உயிர்ப்பிக்கப்படுவார்கள் என்பதை மறுத்தல் என்பது சீர்பொருத்தம் அற்றதாக உள்ளது. சிலர் - குறிப்பாகக் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை அல்ல, ஆனால் மரித்தோரின் பொதுவான உயிர்த்தெழுதலை - அதாவது உயிர்த்தெழுதலின் சாத்தியக்கூற்றை மறுத்துக் கொண்டிருந்தனர்.* [9]*உயிர்ப்பிக்கப்படுபவர்களின் இயல்பு பற்றிய கடினமான கேள்விகளின் காரணமாக, உயிர்த்தெழுதல் நடைபெற இயலாது என்ற விவாதம் மதிப்புள்ள விவாதமாக இருப்பதில்லை.*